1984 பிப்ரவரி 23]

சிறுமலைப் பகுதியில் வாழைக்கு ஏற்பட்ட முடிக்கொத்து நோய்.

*144—*வினா எண் 21078**—வேடசெந்தூர் திரு. வி. பி. பாலசுப் பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் வாழைக்கு ஏற் பட்ட 'முடிக்கொத்து' நோயால் மலைவாழை முழுவதும் அழிந்து விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் அப்பகுதியில் வாழைச் சாகு படியை முறைப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் வாழைப்பயிர் "முடிக்கொத்து நோயால் பரவலாக பாதிக்கப்பட்டது.

(ஆ) "முடிக்கொத்து நோயினை" முழுமையாக போக்க இயலாது. எனினும், தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்கள் அப்பகுதியில் வேளாண் பெருமக்களுக்கு எவ்வாறு "முடிக்கொத்து நோய்" தாக்கிய வாழைகளைக் கண்டறிவது மற்றும் அதனைக் களைந்தெடுப்பதில் உள்ள முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்ப துடன்செயல்படுத்தியும் வருகின்றனர்.

நோயால் தாக்கப்படாத மலைவாழை கன்றுகளை உற்பத்தி செய்து, அப்பகுதிக்கு வழங்க சேலம் மாவட்டம் சின்னகல்வராயன் மலைப்பகுதியில் சீரிய வாழைத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நோயற்ற கன்றுகள் உற்பத்தி செய்து வருங்காலத் தில் மேற்படி மலைப்பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மிகச் சிறப்பான அந்த சிறுமலை வாழை முடிக் கொத்து நோயால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயத்தையே பாதித்துவிட்டது. மீண்டும் அந்தப் பகுதியில் அந்த வாழையைப் பயிரிட்டால் வராது என்று சொல்கிறார்கள். ஆகவே, முடிக் கொத்து நோயை முழுமையாகத் தடுக்க அரசு தகுந்த ஆராய்ச் சியை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள தடியன்குடிசை என்ற இடத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு இருக்கிறது. இது தொடர்ந்து முடிக்கொத்து நோயைத் கட்டுப்படுத்தவும், தடுக்க வும் போன்ற முயற்சிகளைச் செய்து வருகிறது முடிக்கொத்து நோய்' வராமல் வாழை எப்படிப் பயன்படுத்துவது, மற்றும் புதிய வாழை ரகங்களை எப்படிப் பயிரிடுவது என்பதைப்பற்றி வாழை சாகுபடியாளர்களுக்கு விரிவாக்கப் பணி அலுவலர்கள பயிற்சி தந்து வருகிறார்கள்.

[1984 பிப்ரவரி 23

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, சிறுமலை வாழை பயிரிடும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இந்த முடிக்கொத்து நோய் வந்து அந்த நிலங்களைப் பாதித்து விட்டதால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள. அவர்களுக்கு என்ன சலுகைகளை இந்த அரசு செய்ய இருக்கிறது? அவர்கள் வேறு வகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கு உதவி செய்ய அரசு முன் வருமா? அதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

திரு என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் மலைவாழை மிகவும் புகழ்பெற்றது. அது நல்ல மகசூலைத் தந்து, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளுக்குக் கூட ஏற்றுமதியானது என்று சொன்னார்கள். இப்போது முடிக்கொத்து நோய் அந்த பிரசித்திபெற்ற வாழையை அடியோடு அழித்து விட்டது. இதனால் விவசாயிகள் கடன் தொல்லையாலும் மற்றும் பலவற்றாலும் பாதிக்கப்பட்டு விவசாயம் செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள். நமது அரசு விஞ்ஞான அடிப்படையில் புதிய புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கவும், இந்த நோய் முழுமையாக வராமல் தடுக்கவும் அவற்றை விவசாயிகளுக்கு வழங்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே அந்த நோய் முழுமையாக வராமல் இருக்கவும், நோய் பாதிக்காத புதிய ரகங்களை உருவாக்கவும் சேலம் சின்னகல்ராயன் மலைப்பகுதியில் புதிய வாழைத் தோட்டம் அமைத்து, அந்த நோய் வராத வாழையை உற்பத்தி செய்யவும் போதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அந்த முடிக்கொத்துநோய் திண்டுக்கல் பகுதியில் மட்டுமல்ல, கொடைக்கானல் பகுதியில் கூட முடிகொத்து நோய் வந்து, பூராவும் நாசமாகிவிட்டது. அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே இயலாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதே கேள்வியை நான் கேட்டேன். ஓராண்டு ஆகியும் இன்னும் அதற்குப் பரிகாரம் காணமுடியவில்லை. இந்த நோயை அடியோடு ஒழிக்க முடியாதா? எல்லாப் பகுதியிலும் இந்த நோய் வந்து வாழை பாதித்து விட்டது. எத்தனையோ புதிய ரகங்களைக் கண்டு பிடிக்கிறோம். இந்த நோயைப்போக்க

1984 பிப்ரவரி 23]

ஒரு மருந்து கண்டுபிடிக்கக்கூடாதா ? விவசாயிகள் இதனால் அதிக நஷ்டம் அடைந்து இருப்பதால், பயிர்ப்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ் இவைகளைக் கொண்டுவந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே அவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான் நாம் புதிய வாழைக் கன்றுகளை தர இருக்கிறோம்.

1982 ம் வருடம் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் குடி நீருக்காக போடப்பட்ட கைப்பம்புகள்.

145 *வினா 16463 திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடி தண்ணீருக்காக பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் 1982 ஆம் வருடம் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் புதிதாகப் போடப்பட்ட கைப்பம்புகள் (Hand pumps) எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 469.

(முற்பகல் 9—50)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் இதற்கு முன்னால் போடப்பட்டிருந்த கைப்பம்புகள் எத்தனை ? மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கணக்கை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவை எந்த எந்த வகைகளிலே போடப்பட்டவை ? எந்த எந்த காலகட்டத்தில் போடப்பட்டவை ? நான் இரண்டு மாதங்களுக்கு போடப்பட்ட எண்ணிக்கையைத்தான் கேட்டிருக்கிறேன். அந்த இரண்டு மாதங்களில் இவ்வளவு போடப்பட்டிருக்கின்றனவா ? அல்லது வேறு எங்காவது போடப்பட்டவையும் இந்தக் கணக்கிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக எத்தனை இந்த காலகட்டத்திற்குள் போடப் பட்டன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 234 சட்டமன்றத் தொகுதிக்கும் இப்பொழுது எப்படி புள்ளிவிவரம் கொடுக்க முடியும் ?

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த விவரங்கள் கிடைக்கும் என்று கருதிதான் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறேன். பொருத்தமுடைய கேள்வி, பதில் வைத்திருப்பார்கள்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொன்னேன், 469 என்று. இவை கிராமக் குடிநீர் திட்டத்திற்காக வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவைதான்.